

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



கான்சாயபுசண்டை.

இஃது

மயிலம்.

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு அவர்களால்

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது,

1895

உ

கடவுள்துணை.

கான்சாயபுசண்டை.

விருத்தம்.

சீர்வளர்மதுரைதன்னிற் சிறக்கவேசெங்கோலோங்கிப்
பார்வளரமுதம்போன்ற பாகூராபாபுமெச்சும்
காரவளர்பிரபுடீக் கான்சாய்புகதையைபபாடத்
தார்வளர்கூடல்மேயுந் தந்திபொற்பாதங்காப்பாம்.

தாம்தனுதந்தனானு தன
தனனமதனுசந்த னாதந்தனானு

மகுடமுடிடால்கிருதிலக்க ஜன்னல்
மதயானைவளர்த்தெடுத்த வரிவேங்கைக்குட்டி
விகடமிடுவோர்கள்குலகாலன் வெற்றி
விசையாலீம்குலம்விளங்கவருதீரன்
ரதகஜதுரகபடையாளன் நல்ல
நடனமிடுபரிகதுலதுடிநிபுணகொடியான்
மதனதுரைகானுககைபாட எனக்கு
வரந்தரவேணுமடிமதுரைமீனாட்சி
கள்ளரைக்கருவறுத்ததீரன் நல்ல
கனமானமதுரைநகராண்டிடுஞ்சூரன்
உழக்கரிசிகானுகதைபடிக்க நாளும்
உலகந்தழைக்கவேணும்சிக்கந்தர்சாயபு
படைவீரன்கானுகதைபாட செள
பாக்கியம்சீகொடடிபாண்டியன்மகளே
கடல்சூழும்புவியெல்லாம்விளங்க மதுரைக்
கானுகதைதமிழினாற்கழறவேநினைந்தேன்
பிறந்ததுபனையூருமண்ணு கானே
பிள்ளைப்பாலேயெடுத்துவளர்த்தான்முசலாவி
சிறந்தவெள்ளைக்காரனிடத்தில கானு
சீராய்மூன்றரைவருஷப்பிள்ளையாய்வளர்ந்தான்
அவனைமோசஞ்செய்யநினைத்தான் என்று
அப்போதேதுரத்திவிட்டானமுசலாவிவெள்ளைக்காரன்
அவனைவிட்டுத்தட்டுகெட்டுத்தெரிந்து கானன்
அன்பானபிரட்டனிடம்பிள்ளைபோற்சேர்ந்தான்
பிரட்டனிடம்பிள்ளைபோல்வளர்ந்து நல்ல
புலிகுட்டிகானசாய்புபெரியவனுமானான்
மிட்டுமொழிபாஷைகளும்படித்து நல்ல
வீரானமம்முதலிசவாப்புதுரையிடத்தில்
தண்டிலேசேவகமாயிருந்து கானு
தைரியமாய்சேவகஞ்செய்துவருநாளில
ண்டலீசன்மனமிகமகிழ்ந்து அப்போ

வழிச்சாரிஆயத்தொழில்கொடுத்தார்கபாபு
வழிச்சாரிஆயத்தொழிலெடுத்து நல்ல
மம்முதலிசாய்புக்குப்பணங்கட்டிவந்து
வழிச்சாரிசேவகத்தைவிட்டு கானன்
வாங்கினன்சிப்பாயிஆடுதலிதன்னை
ஆடுதலிசிப்பாயிஆகி அதில்
ஆரேழுமாதமாய்த்திரிந்துவருநாளில்
நீடுநாய்க்கருத்தியோகங்கொடுத்தார் கானன்
நிலையாகப்பதினேழுமாதமதிலிருந்து
நாய்க்கருத்தியோகத்தைவிட்டு கானன்
நலமாகஅவுல்தாருவுத்தியோகமெடுத்து
டக்காகச்சிலகாலந்திரிந்து அப்போ
திறமையாயதைவிட்டுசமேதாருமானன்
சமர்பொருதுசமேதாராயிருந்து கானு
தளக்குதிரையிருநூற்றுக்குச்சுபேதாருமானன்
சுபேதாருத்தியோகமெடுத்து அப்போ
சுந்தரமாய்சேவகஞ்செய்துவருநாளில்
தக்கோலம்பேராம்பூர்தனிலே யிருந்து
சந்தசாய்புபடேசாய்புவந்திறங்கிவிட்டான்
திக்கெலாம்வெகுகூச்சலாக அங்கே
சேனைகளெல்லாம்நெருங்கியிருக்கும்வேளையிலே
பசப்பாகபறங்கிமலைமேலே அப்போ
படைகூட்டிப்புதுச்சேரிவெள்ளைக்காரதுரைகள்
மூசுப்பாருடன்பறங்கிமலையிறங்க அதை
மூகண்டகபாபுகாதருங்கேட்டு
முசியார்பாக்கிவெள்ளைக்காரன் பெரிய
முசலாலிதுரைசன்னல்கேமலையழைத்து
முகியாப்பரும்பெரியபிரட்டன் நல்ல
முடிமன்னன்னீர்மேல்நெருப்பையுமழைத்து
சீரானதுரைசின்னபிரட்டன் இவர்களை
சீக்கிரமநவாபுதுரைகூட்டிவரச்சொல்லி
ஆரையனுப்புவோமென்று அப்போ
அதிவீரன்மம்முதலிநவாபுதுரைகேட்டார்
சன்னல்துரைகம்சலகூடிப்பேசி அப்போ
தடமதனன்கான்சாய்பைவரவழைக்கச்சொல்லி
தன்னகரில்லாததுரைபிரட்டன் பார்த்துத்
தைரியமாய்க்கானுதனக்கேதுசொல்வானும்
வாடாநீகான்சாய்புதுரையே பறங்கி
மலைக்கோட்டைநாளெட்டில்பிடிப்பையேயானல்
நீடாகதிசைமதுரைதனக்கு உன்னை
நிசமாகக்கும்தாணுய்வைக்கிறேனென்று
அன்னேரமுறுதியாய்ச்சொல்ல கானன்

அப்போதேகோட்டைவிட்டுவெளியிலேவந்து
கர்னல்பட்டாளமபனிரண்டு நல்ல
கல்கந்தாபட்டாளம்பிர்க்கட்டுரெண்டு
ஐந்நூறுகுதிரைமுதல்நடத்தி அப்போ
யாளிமுகபீரங்கியிருபதுநடத்தி
முன்னேறுமுடிமன்னர்நடக்க நல்ல
முனைவீரன்பிரட்டனிடபட்டாளஞ்சூழ
துரிகொண்டுரிஜிமெண்டுநடக்க சேடி
சோல்தார்கருஞ்சட்டைக்காரர்புடைசூழ
கொடிகொண்டாபாளையமும்நடக்க அப்போ
கோஷ்டமிட்டுமுலதுராபாளையஞ்சூழ
கெடிகொண்டுதம்பூரடிக்க நல்ல
கெர்ச்சனைபாயாறுபுள்ளாங்குழலூத
முடிவேந்தன்கான்சாய்புதுரையும தப்பூர்
முழகியபாளையத்தைநடத்தினனப்போ
ஆர்க்காடுவீதியுங்தாண்டி கானன்
அடர்ந்தேதறிவேலூர்விசலூருந்தாண்டி
தீர்க்கமுடநெல்லூர்தாண்டி அப்போ
சேனதிபதிபறங்கிமலைக்கோட்டைவெளியில்
பறங்கிமலைகிழ்பாரிசத்தில் கானு
பட்டாளமத்தனையுமணியாய்நிறுத்தி
இறங்கியைந்துநாழிகைக்குள்ளே அப்போ
யேற்றினன்மோராஜாவிலேமுப்பீறங்கி
கருமருந்துபோட்டுச்சேர்த்திடிதது அதிலே
கனமானசஞ்சலிகணக்காகப்போட்டு
தருமிரும்புக்குண்டுவெடிகுண்டு கருப்புச்
சட்டைபோட்டேயிடித்துத்தீர்த்திட்டான்பளித்தா
குமுறுதேகாரிடிகள்போலே கானன்
கொளுத்தினன்பீரங்கிசொல்லக்கூடாது
சமர்முகத்திலக்கினியைபபோல குண்டு
தான்பார்த்தவிடமெல்லாமோடுதேநெருங்கி
மழைமாறிபொழியுதேகுண்டு அதிர்ந்து
மானகுமுறுதேபீரங்கிவேட்டு
கலைசூழ்ந்தபறங்கிமலைக்கோட்டை வரிக்
கல்லெல்லாந்தூளாய்ப்பறக்குதேகுண்டால்
கோட்டைதனில்முசுப்பாருமேறிப் பார்த்துக்
கொத்தளந்தன்னிலேசத்தமுகில்போலே
வேட்டாயிரமபளித்தாதீர்த்தான் குண்டு
மேலாடிககானுதுரைபாளையத்தைச்சாட
ஏரிட்டுசதுரைபாளயத்தைச்சாட இன்றைக்
கெப்படியுங்கோட்டைபிடியாமல்விடேனென்று
வீறிட்டுக்குதிரைகள்கனைக்க அப்போ

வேங்கனுக்கான்சாய்புதீர்த்திட்டாண்பலித்தா
மண்டிவரக்கனடந்தசாய்ப்பு குண்டை
வாரியேயிரைத்தாணமழைமாரிபோலே
அண்டியேதுரைகான்சாய்ப்பு குண்டு
அஞ்சாமல்வரக்கண்டுநெஞ்சம்பதைத்து
வழுபீரங்கிதலைகீழாய் நிறுத்தி
ஏராளமாய்ச்செல்லிவாரியதிற்பொட்டு
முழுங்கியக்கினிமாரிபோலே வைத்து
முழக்கினன்குமகுமெனபீரங்கிவேட்டு
மேலாடிபாளையம்நெளிக்க கானு
விழிசிவந்துசாராயப்பீப்பாயைத்திறந்து
காலாட்கள்சோர்ந்தார்படைக்கு அப்போ
கண்டபடிகொடுத்திட்டான்ஒவ்வொருகிராசு
சாராயவெறிகொண்டுசனங்கள் திறக
தாங்காமல்கடவென்றுசாத்தினன்பிரம்பால்
பூராயமாய்ப்பட்டாளத்தைநடத்தி கானன்
புகழ்பறங்கிமலைக் கோட்டைமதிலோரம்வந்து
ஏணிமாமெழுதூறுசாத்தி ஜனத்தை
யேற்றியேபிறம்பாலேசாற்றினன்கானன்
அனிபாயமாய்சிப்பாய்களேற மூசுப்பர்
அக்கினிபோல்கண்சிவந்துகொப்பறைதன்னில்
மூவாயிரத்துலாமீயங்காய்ச்சி அப்போ
மு யிருப்புக்கரண்டியால்சிப்பாய்கள்மேலே
காவலர்கள்வாரியிரைத்திட்டார் அதைக்
கண்டவுடன்சிப்பாய்கள்தலைகீழாய்விழுந்து
நெளிந்சோடச்சோல்தாசினந்து அதட்டி
நொறுநெறென்றடங்கேரிக்கோட்டைமேற்கொண்டு
முழித்துபாராமற்கோட்டையின்மேல் நின்று
மூன்றுபலித்தாதீர்த்துஆணுதலையாக
சீறிபேகோட்டைக்குள்குதிததார் அப்போ
சிப்பாய்கள்பட்டாளம்பின்றொடர்ந்தேறி
ஏறியேகோட்டைக்குட்குதித்து வந்து
எதிரிட்டமுசுபரைக்கைபிடியாய்பிடித்து
முசுபர்தனைப்பறங்கிமலைகோட்டை தன்னில்
முதல்வெட்டுபெட்டாவால்வீசினபின்கானன்
வசுபாகத்தைனுத்துவைத்து பாளையத்தை
வளைத்துப்போய்க்கக்கோலம்பேராம்பூர்பிடித்து
நெல்லூர்சிராப்பளியும்பிடித்து கானு
நேராகஆர்க்காடுவீதிதனில்வந்து
மல்லூருஆர்க்காடுதென்னில் பறைச்சி
மாசாவைக்கண்ணாலேகண்டனேகானன்
மர்சாவைகண்டுமலாகி நல்ல

மதன் துரைகான்சாய்ப்புஆள்விட்ப்பேசி
மாசானைவக்கல்யாணஞ்செய்தான் அப்போ
மதுராபுரிகோட்டைக்குவந்துதடாயோகம்
திரும்பினான் ஆற்காடுவெளியில் கானன்
செயங்கொண்டுவரக்கண்டுசீரான துரைமார்
விரும்பியேசந்தோஷமாகி துரைமார்
வீரானமதுரைக்குகும்தானென்றுசொன்னார்
அதிசேதியர்ககாருஞ்சொல்ல அப்போ
அதிவீரன்மமுதலி-நவாப்புதுரைசொல்வான்
சதுர்மகனேதுரைபெரியபிரட்டா நான்
தியாகவொருசேதிசொல்லுகிறேன்கேளு
கும்தான்கலசமொருபக்கம் பிரட்டர்
கூருசாய்புகலகமோசொல்லக்கூடாது
வர்ம்மமாய்மயலாடிக்கள்ளர் பயமும்
மதியெய்யர்கலகமும்சொல்லப்போகாது
மறவர்குடிபெருக்கதந்தத்தேசம் அந்த
மதுரைக்கனுப்பினால்மோசம்வருமென்றான்
திறமிகும்துரைபெரியபிரட்டன் நவாப்பு
தேவடியிலேயிருந்தேதுசொல்லலுற்றான்
பனிரண்டுவருஷங்களாச்சு அந்தப்
பாண்டிபனபதிசீமைதன்னரசுவிட்டு
இனிநமதுகானுதனையனுப்பி சீமை
யெலலாமடக்கியொருகுடைக்கீழ்நிறுத்தி
வடக்கேவந்துபயணஞ்சேருமபடியாய் இவனை
மதுரைக்குஅனுப்பினால்வசமாகுமென்றான்
திடமாகமம்முதலிசாய்பு அப்போ
சிந்தைதனிலெண்ணிபாலோசனைபண்ணி
புவனமெல்லாமபுகழ்பெரியபிரட்டா நல்ல
பிலிகுட்டிநவாப்புநான்சொல்கிறேன்கேளு
இவனைமதுரைக்கனுப்பிவைத்தால் நானே
யெதிராளியாவானேதிரிச்சினாப்பள்ளிக்கு
கானனையனுப்பவேணடாமென்றார் அப்போ
கர்னல்துரைபிரட்டன்நபாபைப்பார்த்து
நான்வளாத்தபிள்ளையந்தக்கானன் சாய்பு
நம்மோடெதிர்த்தவன்சண்டைக்குவந்தால்
எண்ணியெட்டுநாளைக்குள்ளாக நெருப்பா
யெரித்துநான்மதுராபுரிபிடித்திடுவேனென்றான்
புண்ணியநபாப்புதுரைபார்த்து பிரட்டாவுன்
புத்திக்குச்சரியானபடியென்றுசொல்லி
கானுதனைபக்கத்திலழைத்து நபாபு
கனமாகத்தாம்பூலங்கையிற்கொடுத்து
நானுமஉனையனுப்புகிறேன்சொற்கே எனக்கு

ரண்டகஞ்செய்யாதேயென்றார்சபாப்பு
சானனுமனதுமகிழ்வெய்து பிரட்டனை
கனபிரியமாகவேயேதுசொல்லுவானும்
காயிதங்கையிலேகொடுத்து சாமி
காரியங்கண்ணைகப்பார்த்துச்சொல்லி
நேயமுடன்வடம்னுரைக்கென்று பிரட்டன்
நிசவுறுதியாய்ச்சொல்லிஅரண்மனைபோய்ச்சேர்ந்தான்
சேர்ந்தவுடன்கானுதுரைதானும் பிரட்டன்
திடவுறுதிச்சொன்னபின்வெளியிலேவந்து
மாசாலைக்காடியின்மேலேற்றி சேனை
மருங்கில்நெருங்கிவரக்குதிரைமேலேறி
ஆசாரவாசல்வழிதாண்டி நல்ல
அழகானசென்னைபுரிகோட்டைவெளிதாண்டி
திருச்சினாப்பள்ளிக்கோட்டைதாண்டி கானு
செயனுகைமங்கலம் விராலிமலைதாண்டி
வரிசையாய்மணப்பாறைகடந்து தோகை
மலைதாண்டிநமமணகுரிசசியிலிறங்கி
மம்மன்குருச்சிப்பூச்சேயனையழைத்து கானு
ராசாதிபதியவனுக்கேதுசொலவானும்
சமைபாகஉனதுபெருமசேனை தன்னில்
கள்ளர்பயமேதடாகாடுவழிதன்னில்
இராப்பகலாய்பாளையம்வருது இனிமேல்
இவ்விடந்தன்னில்களவுநடந்துதேயானால்
சுப்பர்சுநீயிருக்குந்தேசம் எல்லாந்
தவிடுபொடியாக்கிரணதூளியாயடித்து
எவனெவனிருந்தாலும்பாரேன் உன்னை
ஏழுமலைக்குப்பாலேவிரட்டுவேனென்று
அவனைப்பயப்படுத்திவழிபதனம் என்று
அரட்டிவலுப்பேசிநடததிட்டானப்போது
துவரங்குரிச்சியதுதாண்டி உயர்
கோசிக்குரிச்சியெனும்தந்தம்வந்துசேர்ந்து
நத்தத்து லிங்கனையழைத்து கானு
நலமானஒருசேதிதிடமாகச்சொல்வான்
கள்ளாபயமிக்காடடிலமெத்த வென்று
கனமாகநபாபுதுரைசொன்னுரடாபாவி
எள்ளளவுபாதைவழிதனிலே லவிண்டி
இனிமேலும்பாதையிலேகள்ளர்பயமானால்
எட்டுநாளையில்கச்சைக்கட்டி உன்னை
ஏலேலோதூக்கிலேபோட்டிடுவேன்கள்ளா
மட்டுள்ளவழிபாதைபட்கனம என்று
மன்னன்வருகிறான்கெடிசபதுரைநோக்கி
அழகர்மலைக்கொம்பையுந்தாண்டி நல்ல

அழகானதேனூர்மைநானவெளிதாண்டி
தளம்பெரியகால்சேனைசூழ நல்ல

சவுர்யமுடனேநல்லகுளமதிலிறங்கி
கொடிமுரசுதம்பூரடிக்க நல்ல

கோட்டமிடுகனதுவஜைபட்டாளஞ்சூழ
துடியாகவான்முகடதிர நல்ல

தோகையர்கள்நடனமிகுவெண்கவரிவீச
கும்பினிமுரசுவெள்ளைக்காரர் தளமும்

கூட்டிமதுராபுரியில்ஒயிலாகச்சேர்ந்தான்
இப்புவியெலாஞ்செவிடுபடவே யிரங்கி

இருபத்தொருவேட்டுதீர்த்தாநகர்தன்னில்
கோடைகாலத்திடிகள்போலே வைத்துக்

கொளுத்தினான்பீரங்கி சொல்லக்கூடாது
வாடைமலர்மதுரைநகர்தன்னில் வாழும்

மதிகூருசாய்பவன்ஏறிட்டுப்பார்த்து
பேசியிளநகர்போச்சுதென்று தளப்

பெருக்குடனேதிருச்சிறுப்பள்ளிகோட்டைசேர்ந்தான்
மதயானைதுரைகானுசாயபு கோட்டை

மதுராபுரியலங்கமீதுநின்றுபார்த்தான்
கதையானமதுராபுரிகோட்டை தன்னில்

சூரமும்வீரியமுஞ்சொல்லமுடியாது
தேங்காய்தண்ணீரலைமோதும துய்ய

சிறுமல்லிப்பூசொரியுந்திசைமதுரைக்கோட்டை
மாங்காய்காய்த்துகுலையுதிருஞ்சோலை நல்ல

மங்கையர்கள்பந்தடிக்குமணிமதுரைவீதி
வெள்ளானைவிளையாடுமதுரை நல்ல

வெண்கதலிக்குலைநெருங்குமிசமதுரைகோட்டை
விள்ளமிர்தஞ்சொரியுந்திசைமதுரை நீண்ட

வீதிகளெல்லாங்கதம்பவாசமதுவீசும்
மந்தாரைமுல்லையிருவாட்சி செண்பக

மலர்சொரிந்துதேனொழுகுமணிமதுரைக்கோட்டை
நந்தரதிமணிமேடைவீதி நல்ல

நவமணிகள்குவித்திருக்கும்நல்மதுரைக்கோட்டை
வாழைகுலைசாய்ந்திடுமதுரை நகரில்

மந்திகள்பிலாக்கனியைமத்தளங்கொட்டும்
தாழைதனில்மயில்தோகையாடும வண்டு

தான்கிதம்பாடி மலர்வாசத்தைத்தேடும்
எழுபத்திரண்டுகொத்தளமாம் கிணற்றில்

எழிலானகயல்குதித்துத்திரிந்துவிளையாடும்
வழுதிசோதிசயங்களனைத்தும் வாயால்

வழுத்தமுடியாதுமனமகிழ்ந்துபார்த்திருந்தான்
இருந்தவொருகான்சாய்புசீலன் நல்ல

இயல்பாகப்பின்னுமவனேதுசெய்வானும்
நானூறுபொன்கையில்கொடுத்து அந்த

நாழியில்மீனாட்சிக்குச் சிறப்புசெய்யச்சொல்லி
பானுமதிசூடுமீனம்பாள் பாதம்

பணிந்துசொக்கேசரையும்வலமாகவந்து
கர்த்தாக்கள்வந்திருக்குமேடை அந்தக்

கருங்கல்லுச்சவுக்கையிலேயிலாகச்சாய்ந்து
மீனாட்சிகிருபைகளினாலே நல்ல

வெங்கலக்கவுதனைப்பேர்த்தவனெடுத்து
தீரனெனும்கான்சாயபுதுரைதான் அதிலே

வெகுகோடித்திரவியமிருக்கமனமகிழ்ந்து
விஸ்தாரஅரண்மனையுங்கட்டி அதிலே

மேல்வீடுமாளிகையுந்தானுண்டுபண்ணி
அரண்மனையில்மகிழ்வாகவிருந்து பின்னும்

ஆறேழுநாள்பொறுத்துயோசனைகள்செய்து
பிறமலையின்மேல்ச்சாரியென்று கானு

பேசிவைத்துமணிவேளைபயணமென்றுசொன்னான்
சொல்லியேயாலயத்தைநடத்திச் சென்று

சூழவேபிறமலைநாட்டாரைவளைத்து
வில்லிலருச்சுனன்போலே பார்த்த

விடமெல்லாம்பிணக்காடாய்வெட்டியிழுத்தெறிந்து
அடங்காதபிறமலைநாட்டாரை வளைத்து

ஆறுபொதிதலைவெட்டியடக்கினான்கானும்
ஒடுங்காதமயிலாடிக்கள்ளர் தன்னை

ஊருக்குயிருபேரைக்கீர்த்தியாய்வைத்து
வட்டிகொண்டுகூடமூடஅடித்து கானு

வழிமீதில்பதின்மூன்றுவராகனையெறிந்தான்
எட்டியதைப்பார்க்கமுடியாது அதிலே

ஈயெறும்புமொய்க்காமலிருந்துதடாபணமும்
கரையானுமருகில்நெருங்காது நல்ல

கருக்குநாயகின்பேரிலிருக்கமுடியாது
காட்டாமலேயடித்துவிட்டான் காட்டிக்

கருங்குருவிமாலைமேச்சுவாலாச்சுமதுரை
ஒருநாறுத்தபிணமெல்லாம் காணும்

ஒன்பதுநாள்வரைக்குமுளர்த்தியேபோட்டான்
கட்டேதுகாவலதியார்கள் தேசங்

கறந்தபால்வெளிவந்தால்க்ரகமுலுகாது
மாசரமேலாணையிட்டபேர்க்கு அந்த

மறியலிலேநின்றவர்க்கு வெகுமதிகள்கொடுப்பார்
கூசாமலாணையிஞ்சினேனை பிடித்துக்

கொண்டுவந்தேழுபேரைத்தூக்கிலேபோட்டான்
வருகையிலேகும்தானென்றுவந்தான் அந்த

மதுரைக்குவந்தபின்புராசாவுமானான்
இருகையிலும்பணமேந்திக்கொண்டு காட்டி

விசைந்துவழிகடக்கவேயிருந்தரசுசெய்தான்
இரட்டப்பநாய்க்கன்வணங்க நல்ல

இரிசப்பநாய்க்கனுங்கண்டுவணங்க
கட்டபொம்மனாய்க்கனும்வணங்க அந்தக்

களக்காட்டேர்மன்னியன்கண்டுசந்திக்க
சாத்துருநாய்க்கன்வணங்க நல்ல

கன்னப்பநாய்க்கனும்சொற்படிகேழ்க்க
சேத்தூருமுடிமன்னன்வணங்க நல்ல

சிவகிரிவன்னியன்கண்டுசந்திக்க
தலைவெட்டியம்மையன்வணங்க அந்த

வடக்கத்தான்புலித்தேவன்சொற்படிகேழ்க்க
தும்பிச்சிநாய்க்கன்வணங்க நல்ல

குடிவளருங்கலங்காதகண்டனும்வணங்க
ஒன்பதூராக்கூளையன்வணங்க மதி

யூகிபெலும்அப்பாஜிகவண்டனும்வணங்க
காணுதமலையாளத்துராசன் எழு

காராணைகொடுத்தனுப்பிக்கப்பமுங்கட்ட
நாணுதவிருதுபாட்சிவணங்க நல்ல

நலங்கொண்டஅனுமந்துசொற்படிகேழ்க்க
நத்தத்துலிங்கையன்வணங்க நல்ல

நம்மன் குரிச்சிப்பூச்சேயன் கண்டுசந்திக்க
மூத்தையன்மூப்பன்வணங்க நாளு

முனைகொடுத்ததென்மலைவன்னியன் வணங்க
இணங்காதவுத்தமன் வணங்க இப்படி

ஏழுனைவருஷமிதிலிருந்தரசு ஆண்டேன்
வணங்காதபேரெல்லாம்வணங்க அந்த

மறவருடதளகர்த்தன் வணங்கவா வில்லை
அடிக்கிறேன் மறவன்மேல்சாரி காளை

பிடிக்கிறேன் திருப்பூவனக்கோட்டையென்றுசொல்லி
எழுத்தாணிகையிலேபிடித்து கானும்

இயல்பாகவக்கணையாயெழுதுகிறானப்போ
முடிமன்னுசேதுபதி தளவா நல்ல

முனைவீரதாமோதரபிள்ளையேகேளும்
அரேபாய்தாமோதரபிள்ளை உன்னுடைய

அசையாதபள்ளிமடைகொடியைவிடுபாவி
திருப்பூவனம்விட்டுவிடவேண்டும் உன்னுடைய

செல்வமுள்ளபாத்திபனூர்விட்டுவிடவேண்டும்
திருப்பூவனம்விட்டுவிட்டாயானால் உன்னுடைய

சிவகங்கைமேல்கத்தியெடுக்கிறதேயில்லை
திருப்பூவனம்கொடுக்காமற்போனால் நல்ல

சிவகங்கைமேல்சாரிவருவேண்டாவென்று
வகைவிபரமாகவேயெழுதி அப்போ

பங்காருநாய்க்கன்வசமனுப்பிவிட்டான்
வருகிறான்மணலூருதாண்டி அந்த

வகையானதிருப்பூவனசோவலூர்தாண்டி
சிங்காரமாகவேநடந்து நல்ல

சிவகிரிபொன்னுங்குளமதுகடந்து
சிவகங்கைபேட்டைக்குள்நுழைந்து நல்ல

திரணைனுந்தாண்டவன்கையில்கொடுத்தான்
விருப்பமுடனெழுதியகாயிதத்தை பாதர்

விறல்பெருகுசிவகங்கைமறவர்தளகர்த்தன்
காயிதவக்கணையைப்பார்த்துக் கோபந்

தான்மீறித்திருப்பூவனக்கோட்டையில்வந்து
திண்டிமாகமேற்சாய்ந்து நல்ல

திடமாகவோலையைச்சீராய்படித்து
..ாண்டவராயதளமந்திரி கோபந்

தான்மீரமறுகிருப்ர்தாளெழுதினே
வேண்டாமடா துரைசாணுமுல்லே காலும்

வேளாளனொருவு நதிசொல்லுகிறேன்கேளு
செல்லூர்சராப்பளியிலிருந்து நீயும்

சேர்தெற்கேமதுரைக்குவருகிறபோது
சொல்வார்ள்குமதாளென்று இப்போ

துடிவளரும்மதுரைக்குத்துரையாளுய்நீயும்
ம்ச்சினனென்றுஉறவாடி உன்னுடைய

மாதாவைத்தங்கையென்றுவுறவாடியிருந்தேன்
முச்சீருஉடுப்புநான்கொடுத்து உனக்கு

முதல்வரிசைமதுரைக்குக்கொடுத்தனுப்பிவிட்டேன்
மதுரையிலேயுனக்குமகன்பிறக்க என்னுடைய

மாணிக்கச்சிவகங்கைசர்க்கரைவழங்க
எதிராதேனெஞ்சந்துணிந்து காணு

என்னுடையதிருப்பூவனஞ்சேழ்ப்பையோவென்று
எழுதியேகாயிதந்தன்னில அப்போ

இபல்பானசேவகர்கையில்கொடுத்தனுப்ப
மதுரைகான்சாய்புகையில்கொடுத்தார் அந்த

மதயானைகான்சாயபுவாசித்துப்பார்த்து
மதிமந்திரிதாண்டவராயா காணு

மதயானையொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
வேலூருவிசலூரிலிருந்து நானும்

விருசமதுரைக்குவந்ததின்பிறகு
எனேக்கண்டுவணங்காதபேரை நீயா

யெரித்துகிர்த்தூளிப்படலமாய்நொறுக்கி
பனையூருமாங்காய்பிடுங்கி நானும்

பத்துவிலேவழிப்பாகைமடிமாங்காய்போட்டு
ஒருமாங்காயதிலேகுறைந்தாக்கால் பாதர்

ஒன்பதுகாய்வட்டிவாங்கினேன்சிங்கம்
தருவோக்குஞ்சிக்கர்தர்மலேயில் பாதை

தன்னில்வெகுதிரவியத்தைமுடிந்துகானெறிந்தேன்
எழுநாளப்படிதானே அதிலே

ஈவெறும்புமொய்க்காமலிருந்துதடாபணமும்
நாளுமதிலேருதுகரையான் அதிலே

கலியாதுகருக்குருவி நாடாதுபணத்தில்
அப்படியடித்தேன்துரைகாணு எனக்கு

ஆரடாபனங்காட்டுமறவனேனதிரி
யென்றுசொல்லிகான்சாய்புலேன் நன்று
எழுதியேகாயிதத்தைதிருப்பூவணமனுப்ப
வந்தவொருகாயிதந்தன்னை நல்ல

வறிசைபெருவேளாளன்பார்த்தேதுசொல்வான்
அடா-யிப்படிசொன்னியேகானு நல்ல

தாகட்டுமொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
குடிக்கிறதுபனங்காட்டிக்கள்ளு மறவர்

எடுக்கிறதுஉடன்காட்டுமொக்குவலைதடிதான்
அடிக்கிறதுகரண்டக்கால்பார்த்து நாங்கள்

பிடிக்கிறதுகொண்டமயிர்தப்பாதுசொன்னேன்
நாங்களடித்துப்பறியாவிட்டால் எங்கள்

நலக்கொண்டகாடுமட்டுமடித்துப்பறித்திடுமே
தாங்கியிங்குவருகனேயாகே உன்னை
க்ஷணத்திலேவிசிடுவேனென்றுவேளாளன்
இன்னம்பலபலசேதிஎழுதி அவனும்
இயல்பாகவனுப்பினான்மதுரைக்கு
வந்ததேமறவருடகிரமம் காணும்
வாசித்துப்பார்த்துமவனேதுசொல்வானும்
இத்தனைவீரியஞ்சொன்னால் பயலே
இனிமேலுங்கானதுரைசொல்லுகிறேன்கேளு
வெத்திலைகொழுந்துகிள்ளுஞ்சாதி நீயும்
வேளாளவம்பிசம்முல்லைமணிமார்பா
மேழிபிடித்துழுஞ்சாதி பாரில்
விளங்கவேயெழுத்தாணிபிடித்தெழுதுஞ்சாதி
நாளுங்கொடிக்கால்பார்க்குஞ்சாதி நீங்கள்
கதிகுலக்கனென்றோச்சியங்களறியும்
பட்டோலையெழுதுமுங்கள்சாதி உனக்கு
படைவெட்டத்தெரியுமோதாண்டவராயா
இப்படிகான்சாய்பெழுதியனுப்ப அதற்கு
எதிர்கிருபமெழுதுகிறான்தாண்டவராயன்
பட்டோலையெழுதுகிறதென்று நல்ல
பரிகுலதுரைகானுசொன்னையேயுன்வாக்கால்
மறுநாட்டோலையினானுன்னை இந்த
மாமரத்துக்கிளையில்தூக்காமல்விட்டால்
சந்த்ரகுலமுத்துவடுகையா உங்கள்

சாமிபுடவாசன்பிரதானிகளல்ல
மிதுபுகழ்வேளாளனல்ல — சிங்கம்
விரித்திருவுந்திவாசுக்கம்பணியுமல்ல
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல — சிங்கம்
போட்டதுவுந்தனகர்த்தமோதிரமுமல்ல
விஜயனென்னுந்தாண்டவராயன் — நிருபம்
எழுதியேயனுப்பிவிடக்கானுதுரைதானும்
வந்தொருகாகிதந்தன்னை — நல்ல
வரிசைபெறுகான்சாய்புபார்த்தேதுசொல்வான்
இந்தமொழிசொன்னியேபயலே — நானும்
இன்னமொருசமாசாரஞ்சொல்லுகிறேன்கேளு
கர்த்தர்களமர்ந்திருக்குமேடை — நல்ல
கருங்கல்லுச்சவுக்கைதன்னைப்பேர்த்துநான்பார்த்தேன்
பத்தாயத்தனிற்பணமுமிருந்து — அதனில்
பதிவானபட்டயமுமெழுதியிருந்துதடா
இரட்டைவெங்கலக்கதவுநிலைதான் — அதிலே
ரோய்கிடக்குதென்றுஎழுதியிருந்தடா
இதம்பெறவேசேனைகளைக்கூட்டி — அந்த
எழிலானவெங்கலக்கதவுநிலையெடுத்தேன்
கதவுநிலையாகவைத்தாண்ட — ஆதி
கர்த்தாக்கள்முன்னதிலேபோட்டிருந்துதடா
தென்புறத்துவரிக்கல்லுமேலே — கோடி
திரவியமிருக்குதென்றெழுதியிருந்துதடா
இதற்குவகையேதென்றுஎண்ணி — நானும்
இயல்பாகமனதிலேயோசனைகள்செய்து
ஐம்பதுபேர்தச்சர்களையழைத்து — நானும்
அரைக்ஷணத்திலாறுவரிககற்கீழிறக்கி
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே — அதிலே
திசைமதுரைக்கர்த்தர்களெழுதியிருந்ததைக்கேள்
பரமேஸ்பரிமீனாளுக்கெதிரே — வாயிற்
படியில்வெகுதங்கப்பாளமிருக்குதென்றிருக்க
இப்போதுதிசைமதுரைமீனாள் — தாயே
எனக்கித்தத்திரவியத்தைக்கொடுக்கவேணுமென்றேன்
அப்போதுதிசைமதுரைமீனாள் — எனக்கு
அறியவேயொருவசனஞ்சொன்னதைக்கேளு
மலைக்காதேதுரைகானுநீலா — நானும்

வைத்திருக்குந்திரவியத்திலாசையாயிருந்தால்
தலைச்சன்பிள்ளைபெண்பிறந்தமங்கை அவளும்
தலைசசன்பிள்ளையுண்டாயிருக்கவேணும்
பிராமணப்பெண்கொண்டுவந்து எனக்குப்
பெலிவெட்டிப்பொங்கவிட்டுக்கொடுப்பையேயானால்
திரவியமிருக்கிறதுநீயும் காணு
திடமாகபெலிக்கவென்றுஉத்தரவுமாச்சு
ஆகட்டுமென்றுசொல்லினானும் அப்போ
அன்பாகஆள்விட்டுவிசாரித்துப்பார்த்தேன்
நானுமுகம்ஆள்விட்டுபார்த்தேன் அப்போ
நலக்கொண்டசோழகர்தன்னிலிருந்தாள்
எழுநூறுபொன்கையில்கொடுத்து நானும்
எழுபேர்சிப்பாய்விட்டுத்தன்னிவரச்சொல்லி
நற்பெலிவாங்கிக்கோதேவி என்று
ராஜாதிகைபினால்வெட்டினேன்காணு
திரவியத்தைநப்பேர்த்தெடுக்கையிலே அதிலே
செப்புநல்லபட்டயமுமெழுதியிருந்ததடா
புட்பவனம்திருப்பூவனமும் உன்னுடைய
புகழானபள்ளிமடைமதுரையுடன்சேர்க்கை
தேவர்கள்பூசைபண்ணுங்கோட்டை என்னுடைய
திருமதுரைச்சேர்க்கையுன் திருப்பூவனக்கோட்டை
சிவகங்கைபட்டணமுநல்ல என்னுடைய
சீரானமதுரைக்குப்பண்ணக்கிராமம்
வயிடூரியக்தங்கம்விளையும் உன்னுடைய
மாணிக்கப்பாத்திபனார்மதுரையுடன்சேர்க்கை
திருச்சிறுப்பள்ளிமடையெல்லாம் முன்னே
திருமலைக்கர்த்தாக்களாண்டிருந்ததேசம்
இப்படிவிபரமாயிருக்க நீயும்
வீணிலேதிரிந்தலைந்துபோகாதேவேண்டாம்
விட்டுவிடுதாண்டவராயா சும்மா
வீணிலேபழிசேர்க்கப்போகாதுசொன்னேன்
எட்டுவருஷகாலமானாலும் நானும்
எதிராடித்திருப்பூவனம்வாங்குவேன்பாவி
என்றெழுதியர்க்காருகையில் காணு
இயல்பாயனுப்பினான் திருப்புவனம்நோக்கி
வந்ததொருகாயிதந்தன்னை முல்லை

வேளாள்ன்வாசித்துயோசனைகள்செய்து
என்னுடையராச்சியமென்றறிந்து நீயும்
இப்படிக்கெல்லாமெழுதினையேதுரையே
கனமானமகுடமுகுமன்றை மூல்லை
காராளனொருவார்த்தைசொல்லுகிறேன்கேளு
மைந்தனுகான்சாய்புலீலா ஒரு
வார்த்தைநான்காராளன்சொல்லுகிறேன்கேளு
மதுராபுரிபிறக்கையிலேகாணு எங்கள்
மகாபுவனவிங்கவது கூடப்பிறந்ததடா
சதுர்மதுரைக்கோட்டைபிறக்கையிலே மறவர்
சமஸ்தானங்கூடப்பிறந்ததடாகாணு
மதுராபுரிக்கோட்டைபிறக்கையிலே இதுவும்
மறவருடமண்ணிதெங்பார்கேட்டுக்கொள்காணு
மூடிக்கிறுய்சப்பிரதாயம்விணில் செம்பொன்
மூடிமன்னன்திருப்பூவணக்கொடியுனக்குவருமோ
குடிக்குமேபூனையங்கப்பாலே அரனைக்
குடிக்கவென்றுநினைந்தாலுங்வலனுகாலாலே
தட்டிக்கவிழ்த்திடுவேன்காணு உன்னுடைய
சம்பிரதாயங்களைநிறுத்திவிடுசொன்னேன்
மன்னனெனுந்தாண்டவராயன் எழுதி
மதுராபுரிதனக்கனுப்பிவிட்டானப்போ
வந்ததொருகாயிதந்தன்னை அந்த
வள்ளலெனுங்கானுதுரைபார்த்தேதுசொல்வான்
அரேபின்னைதாண்டவராயா பாதர்
ஆண்பின்னைகான்சாய்புசொல்லுகிறேன்கேளு
கெட்டியாயிவ்வயணஞ்சொன்னாய். சிங்கம்
கிரீடிகான்துரைகானுசொல்லுகிறேன்கேளு
சிர்தையுடன்முல்லைமணிமார்பா அந்தத்
திருப்பூவணங்கொடுப்பதில்லையென்றுயேபாவி
அந்துநிர்த்துளிபாயடித்து திருப்பூ
வணம்வாங்கிசிவகங்கைசம்பவிளித்து
கெடித்தலமெல்லாங்கொள்ளையடித்து உன்னுடைய
கெம்பீரபார்த்திபனார்தோரணங்கட்டி
அடித்துவினைக்கைப்பிடியாய்ப்பிடித்து என்னுடைய
அங்காளம்மன்கொத்தளத்தில்காவல்வைக்காவிட்டால்
வீராதிவீரனகுரான் ஜனல்

வெள்ளைக்காரன்வளர்த்தெடுத்தபிள்ளையோநானும்
மாலானகான்சாயபுநீலன் — தனது

மைத்துனன்தாண்டவராயனுக்கனுப்ப
வந்தவொருகாயிதந்தன்னை — அந்த

மன்னனெனும்வேளாளன்பார்த்தேதுசொல்வான்
போராடத்துணிந்தியேநீகானு — நல்ல

புலிக்குட்டியொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
திருப்பூவனங்கோட்டையையானால் — வடக்கே

திருச்சிறுப்பள்ளிக்கோட்டைசீராய்நடந்து
பருப்பதப்பொன்வெளியிறங்கு — நம்மிட

பாட்சாகபாயுதன்பேட்டிதான்செய்து
லாட்டுமேலாட்டையுமழைத்து — நல்ல

கலமானநீர்மேல்திருப்பையுமழைத்து
வாட்டமுடன்தம்பியினைக்கூட்டி — கர்னல்

மாட்டியன்மேஜர்துரைஜன்னலையழைத்து
இன்னப்பிரட்டனையுங்கூட்டி — நல்ல

மேகல்துரைமுசியப்பறங்கியையழைத்து
ஜென்னல்வெள்ளைக்காரனையுங்கூட்டி — நல்ல

ஜெயம்பெற்றபிரட்டனையுங்கையோடேயழைத்து
முப்பதுபட்டாளத்தைத்திரட்டி — நல்ல

முடிவேந்தன்வண்டியூரில்கூடாரமடித்து
ஐப்பசிமாதத்திற்குள்ளாக — உன்னை

அணியானபுளியமரச்சோலையில்தூக்காவிட்டால்
நாகுலசிங்கம்நானல்ல — பெரிய

நாலுகோட்டைதளகர்த்தனானல்லகானும்
தேவர்புகழ்முத்துவடுகைய — ராஜ

சிங்கமிழுதிகாரிநானல்லவென்று
எழுதியேகான்சாய்புக்கனுப்ப — நல்ல

இலப்பானகான்சாய்புபார்த்தேதுசொல்வான்
வடக்கேநான்போறேனென்றுசொல்லி — மெத்த

வலுவாகச்சொன்னையேநீதாண்டவராயா
கட்க்கையுமென்னுடையமனிதன் — அதிலே

வரிசையுடனிருக்கிறுன்துரைபெரியபிரட்டன்
பிரட்டனொருதலையிருக்குமட்டும் — சிங்கம்

பிடிப்பாண்டாயெப்படியுந்திசைமதுரைக்கோட்டை
பிரட்டனொருதலைபிளந்துபோனால் — நானே

பருத்தெடுத்தகுஞ்சலேயபாபுசாய்பு
திருச்சிறுப்பள்ளிக்கோட்டைமுகனாய் அடித்துத்
திசைகமபநாட்டிபேகொரணக்கட்டிடுவேன்
துரைசிக்கம்சமர்த்தையறிவென்று நல்ல

குடிவளரும்துரைகானுவைக்காலேசொல்லி
சொன்னதொருசேதிகளெல்லாம் கானு
குடியாகக்காயிதத்திற்சண்டையெழுதி
வரவிட்டான்கான்சாய்புநலன் நல்ல
மங்கையர்வேள்தாண்டவன்மனதிலுட்கொண்டு
இன்னுமொருயோசனைகள்செய்து நல்ல

இதமுடனேவேளாளனேதுசொல்வானும்
கங்கைகுலதாண்டவராயன் நல்ல
கன்னிமைமாசாவின்மனதறியவெண்ணி
தங்கச்சிமாசாவேகேளு உனது
தன்கணவன்சேதிதனைக்கேட்கிலையோதங்காய்
திருப்பூவனங்கேட்கிறான்தங்காய் உன்னுடைய
செல்வமுள்ளபார்த்திபனூர்கேட்கிறான்தங்காய்
திருப்பூவனம்விட்டுவிடுவென நானே
இலகங்கைகுடியிருப்புதிலக்கவொட்டான்கானன்
என்றெழுதிகாயிதத்தையனுப்ப நல்ல

இபலாணமாசாவும்பார்த்தேதுசொல்வாள
அண்ணேநீதாண்டவராயா தங்கச்சி

அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு
சிங்கத்தின்குட்டிநீயண்ணே இதற்குச்
சிந்தைதனிலேநீங்கள்கவலைகொள்ளவேண்டாம்
தங்கையாய்நானிருக்கும்போது உந்தன்
தலைசிமைக்கொருநாளும்அழிவுவாராது
சொல்லியும்கானுதுரைவந்தால் உனக்குத்

தோரணைச்சிட்டெழுதித்தருகிறேனென்று
பவளம்போற்சிவந்திமவாயால் நல்ல

பைங்கொடியெழுதினதைதாண்டவராயன்
பார்த்துமனமகிழ்ச்சியாயிருந்து நல்ல

பண்பாகச்செங்கோல்செலுத்துவருநாளில்
மதுரைநகர்கான்சாய்புதுரையும் அப்போ
மண்டலிகன்யோசித்துயேதுசெய்வானும்
எழுமணிவேளையிலேகானு அப்போ

ஏழூர் இருந்துமாசாவின ரண்மனைக்குவந்து
முடிமன்னன் துரைகானுசாய்பு நல்ல
மோகமிகுமாசாவைவேந்திட்டுப்பார்த்து
அடிபெண்ணே துரைமகளேமாசா காணன்
ஆண்பிள்ளைபொருவயணஞ்சொல்லுகிறேன் கேளு
மலையாளம் பார்த்துவரவேணும் பெண்ணே
மன்னுருகோசிலும்பார்த்துவரவேணும்
இப்படிகானுதுரைசொல்ல மாசா

எதிட்டுப்பார்க்கவனுக்கேதுசொல்வாளாம்
மலையாளம்போய்ப்பார்த்தபேர்கள் அங்கே
மாண்டவர்களல்லாமல்மீண்டவர்களில்லை
வேசிபெருத்ததுவுமதுரை நல்ல
வெள்ளாட்டிபெருத்ததும்தட்சணபூமி
வாசமுடனென்முகம்பாராமல் சாமி
மருமுகம்மதுரையிலேபார்த்தகாலத்தில்
மதுராபுரிக்கோட்டையுமாண்டு நீயும்
வயணமாய்செங்கோல்செலுத்தவுமாட்டாய்
எதிராடிவடக்கேபகையாதே நமது

ஈஸ்பாகபாபுதுரைசேதிதெரியாதோ
மேற்கேபகையாதேதுரைமகனே அந்த
விருதுபெற்றஜதசொன்றுலபொல்லாதவண்டன்
ஏற்கவேதெற்கேபகையாதே அதிலே
ஏழுவண்டிக்கைக்காரர்பொல்லாதபோக்கர்
கிழக்கேபகையாதேதுரைமகனே அந்தக்
கிழக்கர்ட்டிமறவருடசேதிதெரியாதோ
பழக்கமாயிருபேருமிருந்தால் நானும்

படைமதுரைக்கொருநாளுமெதிரொருவரில்லை
என்றுமாசாவும்புத்திசொல்ல கானு
இபல்பாகமுத்தமவனேதுசொல்வானும்
இப்படிசொன்னையடிபெண்ணே நானும்
இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு
டப்பைப்பாளையக்காரர்வணங்க விருது
ராஜகேசரியென்றுராஜர்திறையளக்க
முன்னேகொடுத்தபறங்கிமலைக்கோட்டை தன்னை
மூன்றுநாளைப்பொழுதில்வாங்கினேனானும்
பணங்காட்டுமறவனெனக்கெதிரோ நானை

பார்க்கிறேனவன்சாவர்க்கையபாடிபெண்ணே
யனிரெண்டுவருஷமாகுது நானும்

பார்த்திபனூர்திருப்பூவணம்பிடித்திடுவேனென்று
துடிக்குதுலகான்சாய்புசொல்ல அப்போது

இலேசாத்தமையெனுமாசாயேதுசொல்வாளாம்
இனிமேயாருவருமெதிரில்லையென்று நீரும்

இப்படிசொல்லவேகான்சாய்புதுரையே
இலங்காபுரிக்கோட்டையாண்டு முன்னே

இருந்தானேஇராவணன்பத்துசிரசோடே
துலங்குமகாமேருகல்லைபெயர்த்தான் அவன்

துடியானவாழ்வெங்கேபோய்விட்டான்துரையே
கற்புடையசீதைவியனாலே இலங்கைக்

காவலழிந்ததைக்கேட்டதில்லையோதுரையே
அப்படியேமறவருடன்பகைத்தால் நம்மிட

ஆதினத்தப்பாமலெடுத்துச்சொன்னேன்
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் அதிலே

மறவனென்றுடன்பிறந்தபிறவிதானெனக்கு
மறவர்மேற்படையெடுப்பையானால் நானும்

மங்கிலியங்களைந்துதன்மடியின்மேற்போட்டு
மைந்தனையுங்கையோடேகூட்டி நா

மலையாளம்போய்விடியச்சேருவேனென்று
மாசாவுங்கோபமாய்ச்சொல்ல நல்ல

மதுராபுரிகானுதுரையரண்மனைபோய்ச்சேர்ந்தான்
நடந்ததோர்சேதிகளனைத்தும் மாசா

நலமாகவெழுதியேதாண்டவனுக்கனுப்ப
வஞ்சியர்வேள்தாண்டவராயன் அப்போ

மாசாவின்காயிதத்தைவாசித்துப்பார்த்து
அன்னேரம்வரிசையுடிப்புகளே நல்ல

அன்புள்ளமாசாவுக்கனுப்பவேணுமென்று
முன்னூறுவுலுப்பைமணிசெய்து நல்ல

முடிமன்னன்கைகொலுசுபொன்னாலேசெய்து
வெள்ளியாலுரிக்கயறுசெய்து நல்ல

விலைமதியாவுரிக்கலைபம்பொன்னாலேசெய்து
அள்ளியதில்சீனிசர்க்கரைபோட்டு நலமாய்

ஜடுக்கியிருப்பதுவுரியும்அழகாகச்சேர்த்து
ஒக்கையவளிருந்துவிளையாட நல்ல

தங்கத்தால்பள்ளாங்குழியொன்றுசெய்து
தங்கத்தால்பலகறைகள்செய்து
தங்கத்தாலீர்க்கொல்லிபொன்னூலேசிப்பும்
மாசாவுக்குசீனத்தாவிக்கை நல்ல
வச்சிரமணிமுக்குத்திபொன்னினாற்செய்து
மாசாவின்மகனுகவென்றுசொல்லி

வயிடூரியக்குல்லாவில்வச்சிரக்கல்லழுத்தி
கானனுக்குமுந்தாமேலங்கி வச்சிரக்

கல்லிழைத்தமோதிரமுங்கனமாகச்செய்து
மினுகுசம்பாநெல்லரிசிதனிலே நல்ல

மூவைந்துப்பதினைந்துபொரித்துபிடித்து
அழகுசீரகச்சம்பாநெல்லில் அப்போ

ஆறேழுமாக்காலையவலிடிக்கச்சொல்லி
சரியாகச்சர்க்கரைகலந்து நல்ல

தளமானயாழ்ப்பாணப்பட்டுமெடுத்து
இருநூறுபொன்பெற்றபட்டு ஒரு

இழையிழைக்குச்சரிகையினாற்கங்குகள்கட்டி
பாற்பசுவுபாலாடைகட்டி நல்ல

பண்பானசெங்கரும்புகட்டுபெனிரண்டு
சேல்போலும்விழிமாசாமகிழ மதுரை

திசைநோக்கிஅனுப்பினான்தாண்டவராயன்
வருகுதுமறவருடவரிசை என்று

மதுரைதுரைகான்சாய்புகாதினாற்கேட்டு
தெருவீதிமேடைகடந்து கானு

திருமலைக்கர்த்தாக்கள்சாவடியுந்தாண்டி
சித்திரக்கூடமுந்தாண்டி கானு

தேவடிவிட்டரண்மனைச்சாவடியுந்தாண்டி
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை அந்தக்

கருங்கல்லுச்சவுக்கையிலெலாயிலாகச்சாய்ந்து
நரசிம்மநாய்க்கனையழைத்து நல்ல

நரசப்பன்குருநவப்பனைவரவழைக்கச்சொல்லி
திறமிகுகான்சாய்புசீலன் அந்த

சினிச்சிராவ்மூர்வெள்ளைக்காரனையழைத்து
படபடேசாய்பையுமழைத்து மல்லி

நாய்க்கன்கேசரியைவரவழைக்கச்சொல்லி
கடமநன்முத்தமகுபிள்ளை நல்ல

சண்முகவேலாயுதமுதலியையுமழைத்து
தாணப்பநாய்க்கனையழைத்து நல்ல
தளவாயல்முதலிதனைவரவழைக்கச்சொல்லி
வாய்த்தொருமீனாட்சிஐயன் தனையும்
வகையாகச்சீக்கிரங்கூட்டிவரச்சொல்லி
பனிரண்டுதுரைமாரைப்பார்த்து காணும்
படைமதுரைச்சாவடியில்சாய்ந்திருந்துகொண்டு
நாளை-பனிரண்டுமணிவேளைக்கெல்லாம் அந்த
பாங்கானதிருப்பூவணமேற்படைகள்பயணம்
நாளைக்குமறவன்மேல்சாரி என்று
நம்முடையசேனைகளுக்குறுதிசொல்லுமென்றான்
அந்த-வேளைதனில்மறவருடவரிசை அதுவும்
விருதவண்டியூர்ச்செச்சையிலிறங்கி
தூதுவனைமுன்னேயனுப்ப அவனும்
துரிதமாயோடிவந்துமாசாவுக்குச்சொன்னான்
இதுசேதிமாசாவுங்கேட்டு பர
மேஸ்பரிமீனாட்சியைமனதிலேநினைத்து
சந்தோஷமாகியேமாசா அவனும்
தயாராகிபாப்பாசுகாலுக்கணிந்து
மகனையுங்கக்கத்திலிடுக்கி மாசா
வருகிறாள்ராணுவச்சாவடிகடந்து
சின்னக்கடையுங்கடந்து கானு
தேவடிவிட்டாண்மனைச்சாவடியுந்தாண்டி
சேர்ந்தகோபுரவாசல்தாண்டி அந்த
செகமகிழ்ந்திடும்வடக்குவாசலுந்தாண்டி
மடல்வாழைக்கனிசொரியுமதுரை அந்த
வையையாறுக்கரையிலவந்துநின்றுகொண்டு
உடுப்புவகைவரிசைகளையெல்லாம் மாசா
உத்தாரூற்றுவெளிகொண்டுவரச்சொன்னாள்
வருகுதேமறவருடவரிசை அது
வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது
அதிசயத்தைக்கண்குளிரப்பார்த்து மாசா
அகமகிழ்ந்துமாணிக்கப்பெட்டியைத்திறந்து
மாசாவும்வரிசைகளையெடுத்து அப்போ
வகைதடனேகண்ணாலேயேயிட்டுப்பார்த்து
மாணிக்கப்பெட்டியைத்திறந்து அந்த

வச்சிரமணிகுல்லாவைமகன்தலையில்விரித்து
காளனுக்கனுப்பியமுத்தங்கி அதையுந்
கனமாகவொருதட்டில்தாவெடுத்துவைத்து
தங்கத்தினதொட்டிலையெடுத்து அதிலே
தன்மகனைச்சற்றுநேரம்போட்டாட்டிப்பார்த்தாள்
தனக்குத்தந்தமுத்தாரவிக்கை எடுத்துக்
தான்பூட்டிக்கண்ணாலேதானழகுபார்த்தாள்
செப்பரியமுங்கிற்குழாய்திறந்து மாசா
சீனத்துப்பட்டெடுத்துத்தானுடுத்திக்கொண்டு
இப்படியுடுப்புகளவந்ததற்கு இனி
என்னதான்சொல்லுவாளோபாதகன்காளு
என்மனதுபோலேயடிமீனாள் தாயே
இருக்கவேணுங்காளனுடமனதெல்லாஞ்சொல்லி
நன்மைதரவேணுமடிமீனாள் காளன்
நல்வாக்குசொல்லவேணுமீனாட்சியென்று
நடந்துவந்தாளப்போதுமாசா காளு
ராசாதிபதிமுன்னேவரும்வேளைதனிலே
காளகத்துப்புலிபோலச்சீறி காளன்
கண்சிவந்துபொறிபறக்கப்போதேசொல்வான்
ஏதடிபுதுச்சேரிபெண்ணே உனக்கு
இத்தனையுடுப்புகள்கொடுத்தவர்களாரு
கனகோபமாகவேகேட்டான் அப்போ
கன்னியவள்மாசாவுமேதுசொல்வாளாம்
ஆண்டவனேதுரைகாளுசாய்பே எங்கள்
அண்ணன்காத்தவராயன்கொடுத்தனுப்பிவைத்தான்
மாசாவுமிதுசேதிசொல்ல அப்போ
மதனதுரைகாளசாய்புமேதுசெய்யலுற்றான்
மகன்தலையிலிருக்குங்குல்லாவை காளு
வாங்கிவாச்சொல்லிசண்கெல்லையுங்கழட்டி
உகந்தசராப்பையழைத்து இது
ஒருகல்லுவிலையென்னபெறுமென்றுகேட்டான்
அரண்மனைவிலையாகவிற்றால் ஒன்று
அறுநூறுபொன்னுக்குவாங்கலாங்கல்லை
இருகல்லுங்கூடிவிலையில்விற்றால் ஒவ்வொன்று
எழுநூறுபொன்னுக்குவிற்கலாமென்றான்
இப்படிகல்விலையுதேசம் அங்கே
இருக்குதேமறவருடபுவனத்திலவுண்டு

இப்படிக்கல்னுபெருத்தா லவுண்டி
என்பேச்சைஎள்ளளவுங்கேழ்ப்பானோஅவன்தான்
அடிக்கிறேன்மறவன்மேல்சாரி நாளை
பிடிககிறேன்திருப்பூவனக்கோட்டைதனைபாதர்
முடிக்கிறேன்சாம்பிரதாயப்லவுண்டி என்று
முழுநீலக்கானுதுரைதழுவணையிற்சாய்ந்தான்
பொருப்புலவுந்துரைநானுசாய்பே டந்தன்
புகழ்பெற்றமனையாட்டிசொல்லுகிறேன்கேளு
திருப்பூவனம்வேணுமென்றுகேட்டால் நானும்
சீதனம்போல்வாங்கித்தருகிறேனென்றாள்
இப்படிமாசாவுஞ்சொல்ல அப்போ
இயல்பாகக்கானசாய்புயேதுசொல்வானும்
பெண்சாதிமானியந்தனிலே லவுண்டி
புகழ்பெறறதுரைகானுஆள்வேனோதேசம்
நாளைக்கேயொருபலித்தாதீரதது நானும்
வாங்குவேன்திருப்பூவனக்கோட்டைநான்சிங்கம்
மண்டியேயொருபலித்தாதீர்த்து நாளை
வாங்குவேன்மறவருடபாத்திபனாரென்றான்
மாலானகானுதுரைசொல்ல நல்ல
மங்கையர்கோமணிமாசாவுக்கப்போ
கோபங்கள்சொல்லமுடியாது மாசா
குவளைவிழிசிவப்பேரிச்சபைதனிலேநின்று
இராவணனாய்நீவந்துபிரந்தாய் அதற்கு
இராமசாமியாகப்பிறந்திட்டான்மறவன்
சூரனாய்நீவந்துபிறந்தாய் சிவ
சுப்பிரமணியராகப்பிறந்திட்டான்மறவன்
கோரமிகுகஞ்சனாய்ப்பிறந்தாய் அவனைக்
கொன்றதோர்கிருஷ்ணனாய்ப்பிறந்திட்டான்மறவன்
துரியோதனனாகப்பிறந்தாய் குரு
தேசிகன்தர்மனைப்போல்பிறந்திட்டான்மறவன்
அரியகீசகன்போலப்பிறந்தாய் அதற்கு
அதிவீரன்வீமனைப்போல்பிறந்திட்டான்மறவன்
திறல்விஜயன்போல்மறவன்பிறந்தான் அதற்குத்
தேத்தரசன்போல்பிறந்தாய்திசைமதுரைக்கார்க்க
ஆரோடேபகைத்தாலுமுனக்கு துரையே
அவர்களாலொருநாளுந்தாழ்வுவாராது

காஞனசெயித்திட்டாலண்ணே உனக்கு
கலக்கங்களொன்றுமில்லைமுல்லைமணிமார்பா
குறிப்பாகவெள்ளம்வருமுன்னே அணை
கோலிக்கொள்வடக்குசென்றுநயாபிடதத்திற்சொல்லு
எனைநம்பிநீயிருக்கவேண்டாம் உனக்
கியன்றபடிபார்முல்லைதாண்டவராயா
மனதுரம்மியமாகவெழுதி மடித்து
மாரியர்க்கார்கையில்கொடுத்தனுப்பிவைத்தாள்
மாரியெனும்மர்க்காருமவாங்கிக் கொண்டு
மணலூருதாண்டியேதிருப்பூவனஞ்சேர்ந்து
மண்டலீகன்கொலுவுக்குமுன்னே வைத்து
வகையாகச்சேதிசொல்லிக்கும்பிட்டுநின்றான்
மாசாவின்காயிதத்தைபபார்த்து அந்த
மந்திரிதாண்டவராயன்சந்தோஷப்பட்டு
மருமகனைகைலாசம்பிள்ளை தங்கை
மாசாவின்காயிதத்தைவாசியென்றுசொன்னான்
மருமகனுங்காயிதத்தைவாங்கி அப்போ
வாசிக்கத்தளகர்த்தன்காதாரக்கேட்டு
ங்கமேயர்க்காரமாரி ஒரு
சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளும்
ங்கச்சியென்றல்லோயிருந்தேன் எனக்குச்
சத்ராதியானேளேதிசைமதுரைமாசா
மத்துனன்என்றல்லோயிருந்தேன் எனக்கு
மாத்தானாய்வந்தானேமதுரைதிசைகானன்
ற்சனனுரவுபகையாச்சே என்று
சொல்லுபோமாசாவுக்குள்ளபடிமாரி
னிமேலுந்திருப்பூவனமிருந்தால் நம்மை
இருக்கொட்டான்வடக்கேதானடக்கவேணுமென்று
னிவீரதாண்டவராயன் அந்த
க்ஷணத்திலேபயணமென்றுதன்சேனைக்குரைத்து
ப்பிள்ளைசுப்ரமண்யதேவா ஒரு
வார்த்தைநான்வேளாளன்சொல்லுவேன்கேளு
ப்பாமல்திருப்பூவனந்தனிலே நீங்கள்
தயாராயிருக்கவேணுங்கானுதுரைவருவான்
ர்க்காடுநான்போறேன்தம்பி ஆறு
மாசமேஆறுவருஷமோதெரியாது.

மார்க்கமாநான்வருமட்டும் நமது
மறவர்திருப்பூவனம்பத்திரமென்று
உறுதிகளும்வெகுவாகச்சொல்லி அந்த
உத்தமனுங்குதிரைமேல்சீனிவைத்தேறி
நடந்திட்டான்தாண்னவராயன் அந்த
நாழியிற்சிவகங்கைப்பேட்டைவந்துசேர்ந்து
தடம்பரவும்பொன்மலாசெய்து நல்ல
தங்கமலர்வெள்ளிமலர்தன்கையிலெடுத்து
விருதுரணபேரிகைமுழங்க குதிரை
மேலிட்டநகபத்துடங்காமுழங்க
இருபுறமும்வெண்கவரிவீச நல்ல
எறியீட்டிவெடிக்காரர்முன்னேநடக்க
கத்திகேடயக்காரர்சூழ குதிரை
காரர்படைவீறுடனேகடல்போல்நடக்க
வெற்றிவெணசாமரைகள்வீச முல்லை
வேளாளன்புறப்பட்டான்சொல்லமுடியாது
மிக்காஞ்சிரநகாலுங்கழித்து நல்ல
வீருணநால்கோட்டைசோழபுரந்தாண்டி
ஓலக்கூறுமைதானந்தாண்டி நல்ல
உத்தாருந்தளபட்டிஒப்பமுந்தாண்டி
அரளிக்கோட்டையாசாரந்தாண்டி அந்த
ஆஸ்தானந்திருக்கோட்டியூர்மைதானந்தாண்டி
திறல்விஜயன்தாண்டவராயன் அப்போ
சீக்கிரம்வயிரவன்பட்டிபோய்ச்சேர்ந்து
சலுகைப்பெரியவுடையானின்ற நல்ல
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன்
சந்திப்புகொடுக்கவேணுமென்று துணைக்குத்
தயாராகப்பூப்பந்தல்போட்டிடச்சொல்லி
மஞ்சுதவழ்கனிவாழைநாட்டில் நல்ல
மகரதோரணங்கட்டிமாங்கனிகள்தூக்கி
அஞ்சடுக்குபஞ்சுமெத்தைதூக்கி அதிலே
ஐங்கலமல்லிகைப்பூகாம்பகிந்துகட்டி
பச்சைதிண்டுதலையணைகள்வைத்து அதிலே
பாங்கானதிண்டொன்றுகொண்டுவந்துசாற்றி
இச்சைபெறசல்லாவைவிரித்து நல்ல
இதவாகமலர்பரப்பிபன்னீர்தெளித்து

வண்ணமையுடன்சோடித்துவைத்து ஜக
மண்டேஸ்வரன் துருவன்முத்துவடுகையன்
கண்வளர்விபூதிதனைப்பூசி நல்ல
கஸ்தூரிபொட்டுஞ்சவ்வாதுந்தரித்து
ஒருபிடிபூணூல்துலங்க நல்ல
லத்திராட்சப்பொன்குவளைபூஞ்சலிட்டாட
மறுமுத்துதாழ்வடந்துலங்க காதில்
வயிரவயிடூரியக்கல்கடுக்கனுமிலங்க
முருகுவச்சிரகண்டிதுலங்க காதில்
மோடியுடன்மரகதக்கல்கடுக்கனுமிலங்க
இருகையிலுந்தங்கவளையிலங்க சிரசில்
ஈராந்துமுத்துகொண்டைப்பாகையுந்துலங்க
பூவாலேபூப்பந்தல்போட்டு நல்ல
பூலோகதேவேந்திரன்வெளியில்வருகையிலே
வடக்குவடக்கிடுெடண்டதிர நல்ல
பாங்காகவலம்புரிச்சங்குநின்றூத
இடிபோலேபேரிகைமுழங்க நல்ல
இசையானசங்கீதம்மேளம்துலங்க
திடமுடையநகுலாபராக்கு உலகில்
தேவதேவேந்திராதிராபராக்கு
வடகரைப்புலிபெரியவுடையார் தேவர்
வங்கிஷம்விளங்கவருமாலேபராக்கு
இப்படிகட்டியங்கூற பூலோக
இந்திரனராதிபதிகொலுவந்துசேர்ந்து
கெற்புலிமுத்துவடுகையர் பாதர்
கிரீடிகொலுசேர்ந்தவுடன்தாண்டவராயன்
திருப்பாலகரைதனக்குவந்து வெள்ளி
செம்புதனில்சுத்தசலமதைமொண்டுகொண்டு
திருப்பரங்கரையதுகடந்து துரை
தேவேந்திரன்கொலுவில்சென்றுதளகர்த்தன்
ஒருபிடிவாரகனொருகட்டில் கொட்டி
உத்தமன்தளகர்த்தனிருகையாலேந்தி
துருவனிகரெனத்திஷ்டிசுத்தி அதைச்
சுழற்றியெறிந்துமுல்லைதாண்டவராயன்
வேதமொருமறையோர்கள் துரையை
வேளாளன்மூன்றுதரஞ்சுற்றிவந்துநின்று

பாதமதில்பன்னீர்சொரிந்து
　　பட்டினலிரமதுதானேதுடைத்து
தங்கமலர்வெள்ளிமலரெடுத்து　துரை
　　சாமியுடபாதத்தில்தானுஞ்சொரிந்து
செங்கைகுவித்தேமுல்லைமார்பன்　நல்ல
　　ஜெயமண்டலேஸ்வரன்திருவடிதனிலே
முடிசாய்த்துத்தாண்டவராயன்　துகை
　　முத்துவடுகையரதுபாதத்தில்வீழ்ந்தான்
திடீரெனறுஇருகையால்தாங்கி　துரை
　　சீர்பெறவாசீர்வதித்தெழுந்திரென்றுசொல்லி
மோதிரக்கையினலேதாங்கி　அண்ணே
　　முடிமன்னகாராளாசொல்லுகிறேன்கேளு
வயதுக்குமூத்தவனேயண்ணே　என்னை
　　வணக்கமாய்க்கும்பிடுதல்ஞாயமல்லசொன்னேன்
ஆதிக்கநிலைநிறுத்திவைத்தாய்　அண்ணே
　　ஆஸ்தானம்நிலைநிறுத்திவைத்தவன்நீதான்
என்னசங்கதிகொண்டுவந்தாய்　அண்ணே
　　எந்தனுக்குச்சொல்லென்றுகேட்டாரேதுரையும்
ஆண்டவனேமுத்துவடுகையா　உனது
　　அடிமைநானகாராளன்சொல்லுகிறேன்கேளு
உனக்காகவந்தவகைசாமி　சாமி
　　உள்ளபடிவேளாளன்சொல்லுகிறேன்கேளு
திருச்சிறுபள்ளிகோட்டைதனிலே　யிருந்து
　　திசைமதுரைக்கோட்டைக்குவந்தானேகானன்
நெல்லூர்சிராப்பளியிலிருந்து　கானன்
　　நேர்தெற்கேவடமதுரைக்கோட்டைவருகையிலே
வரும்போதுகும்தானென்றுவந்தான்　அந்த
　　மதுரைக்குவந்தபிறகுகானுதுரையானன்
அவனைமைத்துனனென்றுவுரவாடி　அவன்
　　மாசாபுலைச்சியைத்தங்கையென்றெண்ணி
உடுப்புகள்வெகுவாகக்கொடுத்தேன்　அந்த
　　உலோபியாங்கானனுக்குவிசுவாசமில்லை
கட்டாதவுலுப்பைகட்டியனுப்ப　துரையே
　　கானனுக்கெவ்வளவுவிசுவாசமில்லை
திருப்பூவனங்கேட்கிருன்சாமி　நம்முட
　　செல்வமுள்ளபாத்திபனூர்கேட்கிருன்சாமி
திருப்பூவனம்விட்டுவிட்டிடுவேன்　நானே
　　சிவகங்கைகுடியிருப்புநிலைக்கொடடான்கானன்

இப்படிதாண்டவராயன்சொல்ல நல்ல
    இபல்பாகமுத்துவடுகையருஞ்சொல்வார்
வேணுமென்றுகானுதுரைகேட்டால் அண்ணே
    வீணிலேசயினியத்தையிழுக்காதேவேண்டாம்
நாலுகோட்டைசோழபுரம்போலும் அந்த
    நலங்கொண்டபார்த்திபனூர்விட்டுவிடுமென்றார்
மேலுமவனுடனேபகையாதே சண்டை
    மேற்கொண்டுமவனுடனேயெதிர்க்கமுடியாது
எந்தந்தசீமைகேட்டாலும் அவனுக்
    கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம்
மாபோஜன்மதுரையுடன்சேர்க்கை திருப்பூ
    வணக்கோட்டைவிட்டுவிடுமதிமந்தரியென்றார்
இப்படிதுரைமகனுஞ்சொல்ல நல்ல
    இயல்பாகவேளாளனேதுசொல்வானும
போபோபேய்கொண்டதுரையே உமது
    புத்தியுமிமடடோமுத்துவடுகையா
சண்டவிரவிடங்கொடுப்பேனே பாதர்
    துரைவாசம்மதிமந்த்ரியதிகாரியடியேன்
கண்டறியுமுனதடிமைசேதி என்று
    காராளன்சொன்னமொழிகாதாரக்கேட்டு
இப்படிதயிரியங்கள்சொன்னால் அண்ணே
    எப்படியவனைநீசெயங்கொள்வையென்றார்
அப்போதுமுல்லைமணிமார்பன் சிங்கம்
    ஆண்டவன்முகம்நோக்கியேதுசொல்வானும்
ஆர்க்காடுநானுமிப்போநடந்து நல்ல
    அனைவர்புகழ்நவாப்புதனைகண்டுசந்தித்து
தாக்காகவேபடைதிரட்டி அந்த
    சற்சனன்துரைபெரியபிரட்டனையுங்கூட்டி
மேவலர்கிரீடிமுசலாவி கானன்
    மேஜர்துரைமுசலிபராங்கியையுமழைத்து
ஆவணிமாதத்திற்குள்ளாக அவனை
    யனைவோருமறியவேதூக்காமல்விட்டால்
என்பேருதாண்டவனல்ல சிங்கம்
    எடுத்ததுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல பாதர்
    போட்டதுவுந்தீவாசுகம்பளியுமல்ல
நன்னகர்சிறந்தபுலிபோற்றும் நல்ல
    நாலுகோட்டைதளகர்த்தனல்லவென்றான்

வற்கலேவிரியஞ்சொன்னாய் அண்ணே
இதற்குநான்மறுவயணஞ்சொல்லுகிறேன்கேளு
ஆர்க்காடுபோகிறது அண்ணே எனக்கு
அன்பாகத்தோற்றவில்லைதாண்டவராயா
துலுக்கனைநம்பலாமோ அண்ணே அந்த
துரோகிபறங்கிகளைநம்பவுங்கூடாது
மேலுக்காயிதுவரைக்கும்இருக்கோம் சும்மா
விருதாவிலேவடக்கேபோகிறாயண்ணே
கொள்ளுதான்பெருத்திருக்குந்தேசம் அதிலே
குடிகேடுமெத்தவுண்டுதிருச்சிறாப்பளியில்
ஏழைவருஷத்துப்பருத்தி நாமும்
எள்ளளவும்வடக்குமுகங்கொடுத்தனுப்பவில்லை
போனநாழியிலேநபாபு உன்னைப்
பிடித்தல்லோபாராவில்போடுவானென்றார்
மகானுபாவாமுத்துவடுகையா உனது
மதிமந்த்ரிபிரதாபஞ்சொல்லுகிறேன்கேளு
காலாலேமுடிவனொருமுடித்து அதனைக்
கையினாலவிழ்த்தாக்காலவன்தானபாபு
மாலானமம்முதலிநாய்பை பொன்
மலைவெளியிலிழுத்துவர்துபேட்டியுஞ்செய்து
அவனிடத்தில்வெகுமதியும்வாங்கி சாமி
அவன்செவியைநான்பிடித்தாட்டுவேனென்றான்
கவனமுடன்முல்லைமணிமார்பா வடக்கே
கனமுடனேபோய்வரயோசிக்கிறாயண்ணே
ஆற்காடுபோனவர்களண்ணே கொழுத்த
யானைவாயிற்கொடுத்தகரும்பல்லோமந்த்ரி
போர்க்குரியதிருச்சிறாப்பள்ளிக்கு அங்கே
போனவர்கள்திரும்பிவரக்காணேனுன்மந்த்ரி
மண்ணைதானாண்டவர்களண்ணே இந்த
மண்ணிலுங்கோடியடாமுல்லைமணிமார்பா
என்றைக்குநிட்சயமோ அண்ணே இப்போ
என்மனதுக்கவ்வளவுஞ்சம்மதிகளில்லை
எந்தெந்ததேசங்கேட்டாலும் அவனுக்
இல்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம்
இந்தமொழிசொன்னீர்சாமி தேவா
இப்படியேசெங்கோல்செலுத்தவேபோரீர்
ஒருகாசுசெலவழிக்காமல் சாமி
உனதுமைதுனைமதுரைபிடியாமற்போனால்

தருமகுணமுத்துவடுகையா உமக்கு
　　தலையானபிரதானியாவனேவென்றார்
என்வார்த்தைகேளாமற்போனு யுன்னை
　　என்றைக்குக்காண்பேனேமுல்லைமணிமார்பா
சாமியுடதிருநாமந்தன்னை அடியேன்
　　தலையின்மேல்வைத்துக்கொண்டாற்காடுசென்று
திசைகட்டுஒருகட்டாய்கட்டி நானத்
　　திருப்பூவனத்திசையாகப்பாளையங்கைகூட்டி.
மறவருட்தளகர்த்தனென்று இந்த
　　வையகமுழுதுமெனச்சொல்லவேணுமென்றான்
ஆற்காடுபோகிறபோது நல்ல
　　டீக்காகப்போவென்றார்முத்துவடுகையர்
சிங்கமேகவுரிவல்லையா ஒரு
　　சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளு
உரியசிபஞ்சகாலத்தில் கெவுரி
　　ஒருகோடிஜனத்தையும்ரட்சித்ததாதா
ஒற்றைக்குதிரையேறாதே சாமி
　　உள்சுற்றுக்காற்றுவழிமிஞ்சிநடவாதே
நான்போய்வருமட்டுந்துரையே நம்மிட
　　நாயகன்கானையார்கோயிலிலிருக்க
இவிடத்திலின்னமிருந்தாக்கால் நானே
　　மோசங்கள்வராதுவிடுமுத்துவடுகையா
சொல்லிவாய்மூடிவதற்குள்ளே அப்போ
　　துரைமகனுமண்ணன்முகமேறிட்டுப்பார்த்து
அண்ணேவாதாண்டவராயா இப்போ
　　அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு
இவிடம்விட்டுஆர்க்காடுபோனுல் உன்னை
　　என்றைக்குக்காண்பேனேதாண்டவராயா
பொன்மிகுத்ததிருச்சிறுப்பளிக்கு நீயும்
　　போகிறையேயுன்னழகுபார்க்கவேணுமென்று
ஆண்டவன்முத்துவடுகையர் அந்த
　　நாழியில்காளாஞ்சிக்குப்பனையழைத்து
ராயப்பன்சேருவையழைத்து அப்போ
　　நலங்கொண்டயானைதனைக்கொண்டுவரச்சொல்லி
நேயமுடன்சித்திரங்களெழுதி அதிலே
　　ரோகப்பூச்சக்கிரஅவுதாவும்வைத்து
முத்துநாய்க்கனையுமழைத்து நல்ல
　　முடிமன்னன்பொக்கிஷவீட்டைத்திறந்து

உக்கிராணவீட்டைத்திறந்து ஒரு
பெட்டியைத்திறந்தெடுத்துவரச்சொல்லி
வச்சிரமணிபெட்டியைத்திறந்து அப்போ
வரிசைகள்வெளிதனிலேதிடலென்றெடுத்துப்
பத்துப்பொன்போருவையெடுத்து நல்ல
பச்சைக்கடுக்கனொருபாகையுங்கொடுத்து
தங்கவளைமுன்கைமூகாரி பகுந்
தங்கமோகனமாலைசரப்பணிகொடுத்து
துங்கமிகுத்தகட்டுவில்லையங்கி நல்ல
துதிபெறுவெள்ளாமூனுக்குவெகுமதிகள்செய்து
அழகுநான்பார்க்கவேணுமண்ணே சற்றே
ஆனைமேல்நீயேறிவாவென்றுசொன்னார்
தனகர்த்தன்வெகுமதிகள்வாங்கி வெகு
தனத்துடனேயானைதனைமூன்றுதரஞ்சுற்றி
நேராய்ச்சலாம்வாங்கிநின்று அப்போ
நேரில்நிற்குமுத்துவடுகையரைப்பார்த்து
மெத்தவெருதுடினஞ்செய்யாதே கம்பிட
மேனாட்டுக்கள்ளருடனெதிர்த்துப்பகைசெய்யாதே
பேட்டிநான்செய்துவருமட்டும் நல்ல
பேருணசின்னையாநல்லண்ணதேவா
தெற்குதென்பாரிசந்தனிலே நல்ல
இடமாகயானைகட்டுங்கல்லுக்குமேற்கே
நாருகர்மேல்வீடுதன்னில் முத்துச்
சுவர்ணசாமிமகன்கொலுவினிலிருந்தார்
வல்வீரகெப்பீசபராக்கு என்று
மதிமந்திரியானைமேலிருந்துகும்பிட்டான்
ஆண்டவனேமுத்துவடுகையா என்று
அரசர்புகழ்காரனைக்கும்பிடும்போது
சலுகைப்பெரியுடையானிற ராஜ
சுவர்ணசாமிமகன்முத்துவடுகையன்
உத்தரவுமுன்னேமணிமார்பா இப்போ
உனதழகுகண்ணாலேபார்த்தனடா அண்ணே
செத்தாலுமோட்சமுண்டு அண்ணே என்று
திருஷ்டிசுத்திபோய்வாருமென்றுசொன்னாரப்போ
தீரனும்போய்வாவென்றுரைக்க அப்போ
திருப்பினான்யானைதனைத்தாண்டவராயன்
கட்டியர்பராக்கென்றுகூற நல்ல
கள்வளரும்வயிரவன்பட்டியுந்தாண்டி

திருப்பத்தூர்சிமைவிதாண்டி வளர்
சிராவயலுடன்மருதங்குடிகடந்து
சிராவயல்ஓப்பமூர்தாண்டி தனது
திருவளருங்குன்னக்குடிவக்தங்கேசேர்ந்து
ஐம்பதுபொன்னைஎடுத்துக்கொடுத்து நல்ல
ஆண்டவன்குமாரகுருவுக்குச்சிறப்புசெய்யச்சொல்லி
மந்தாரமூலையிருவாட்சி நல்ல
மகிழம்பூகூடமல்லிசாத்தென்றுசொல்லி
வெள்ளிமலர்பொன்மலருஞ்சாற்றி நல்ல
விதமானவில்வமலரர்ச்சனையுஞ்செய்து
தாண்டவராயதள்மந்த்ரி நல்ல
தயிரியமாய்கும்பிட்டுஎதுசொல்வானும்
வடக்கேதான்போய்வரலாமென்றால் சுவாமி
வலதுபுறங்கௌளியதுசொல்லவேணும்சுவாமி
வடக்கேநான்போகலாகாதென்றால் சுவாமி
வலதுபுறஞ்சொல்லவேணுமென்றான்வேளாளன்
கேட்டுவாய்மூடுவதற்குள்ளே நல்ல
கெம்பீரமாய்த்தெட்சணமுத்தரவுமாச்சு
சுவாமியினுத்தரவு தன்னை நல்ல
தளமந்த்ரிதாண்டவன்முந்தானையில்முடிந்து
சந்தோஷமாய்வெளியில்வந்து நல்ல
தாண்டவராயதளமந்திரிமகிழ்ந்து
வையாபுரிகரைதனிலேறி மண்ட
லாதிபதிதீவாசுக்கம்பளியிலிருந்து
தம்பிதாமோதரம்பிள்ளை யிப்போ
தயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு
வும்பனும்சின்னமறவனோலே உனக்கு
வருதென்றுசந்தோஷங்கொள்ளாதேஅண்ணே
வானஞ்சிறந்துவரம்பழிந்துபோனால் அங்க
வாய்க்காலும்நிற்குமோஅல்லிகுலமன்னு
என்சீமையழிந்துபோகையிலே நிலைத்து
இருக்குமோஉன்சீமைராமநாதபுரந்தான்
சிவகங்கைபேட்டைபோகையிலே நிலைத்து
நிற்குமோஉன்னுடையராமநாதபேட்டை
மலைக்கோட்டைதுருவமதிலிருந்து நமது
மதுராபுரிக்கோட்டைக்குவந்தானேகானன்
மதுரைவளர்கான்சாய்புதுரையே நாம்
மைத்துனனென்றுசொல்லியொப்பாரிபிடித்து

மாசாவைத்தங்கைபென்றுசொல்லி — இப்படி
மரியாதையாய்நானும்யோசித்திருந்தேன்
என்னவுபசாரஞ்செய்தாலும் — அவனு
கொள்ளளவுமனதிலேவிசுவாசமில்லை
நிலையானதிருப்பூவணமும — என்னுடைய
சோனபாத்திபனூர்கேழ்க்கிறுன்கானன்
உன்னுடையதிருச்சிறைப்பள்ளி — சீமை
பொருமிக்கக்கேழ்க்கிறுன்கான்சாயபுலேன்
ஆற்காடுநபாபையனுழத்துவந்து — அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபிடிக்கவேணுந்தம்பி
அஞ்சலிலேயாற்காடுசென்று — நபாபை
அழைத்துவந்துமதுரைநகர்பிடிக்கவேணுந்தம்பி
இவ்வோலைகண்டநாழிகைக்கு — தம்பி
எழுமயிலேருண்ணக்குடிவாராமலேபோனால்
நபாபையழைத்துவரும்போது — எல்லோரும்
நகைக்கவேயுன்சீமைமுதற்கொள்ளையடிப்பேன்
என்றுசொல்லிகாயிதத்தையெழுதி — அப்போ
